# மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 01 திங்கட்கிழமை 18.09.2023 அதிர்வு 49


**திருகோணமலை சம்பவம்:**

## இரு பெண்கள் உட்பட அறுவர் இன்று கைது!

**21 வரை விளக்கமறியல்**

04







**‘தியாகி திலீபன் அகிம்சையின் அடையாளம்’**

# ‘திருகோணமலை தமிழரின் தலைநகர்! நிறுத்து நிறுத்து அடாவடியை நிறுத்து!!’

**சிங்களக் காடையர்களின் வெறியாட்டத்துக்கு எதிராகப் போராட்டம்**

-முல்லைத்தீவு நிருபர் -

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையைக் கண்டித்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – தேவிபுரம் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முற்பகல் முன்னெடுக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம் – வள்ளிபுனம் கிராம மக்கள்

04

**வவுனியாவில் திலீபனின் ஊர்திப் பவனிக்கு**

# தடை கோரி பொலிஸ் விண்ணப்பம் அடியோடு நிராகரித்தது நீதிமன்றம்

**பாதுகாப்பு வழங்குமாறும் அதிரடி உத்தரவு**



- கே.வசந்தரூபன் -


தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி, வவுனியாவில் பயணிப்பதற்குப் பொலிஸார் தடைகோரி வவுனியா நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்த போதும், நீதிமன்றம் அதனை நிராகரித்து, குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தலையொட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ‘திலீபன் வழியில் வருகின்றோம்’

04

**மோடியை ஒன்றாகச் சேர்ந்து சந்தித்தல்:**

## தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் பதிலை எதிர்பார்க்கிறார் விக்கி



- என்.புவியரசன் -

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து பேச வேண்டும் என அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணியின்

04

## சிறுபான்மைச் சமூகத்தினர் இன்னும் அடக்குமுறைக்குள்

**கஜேந்திரன் மீதான தாக்குதல் எடுத்துக்காட்டு என்கிறார் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்**



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன்

04

# தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே பொலிஸாரின் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## கஜேந்திரன் மீதான தாக்குதலுக்கு சந்திரகுமார் கண்டனம்

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில ரௌடிகளால் தாக்கப்படும் போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் மிகவும் கண்டனத்திற்குரியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் –

செல்வராசா கஜேந்திரன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர். அவரை தெருவில் ஒன்று கூடிய சில ரௌடிகள், சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவது என்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல்.



தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளை தடுத்து சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தமை என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது.

இதுதான் இந்த நாட்டின் நிலைமை, தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடாத்தப்படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம்.

நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ளவிடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்த தாக்குதல் சம்பவத்தைக் கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.

# மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் கவலை

நாட்டில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அரசு இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களல எதிர்நோக்க வேண்டி உள்ளது.

இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் விஜயரட்ணசிங்கம் தர்ஷன் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தற்போது மருந்து தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாடு, ஆய்வு கூட இரசாயன பதார்த்தங்களின் தட்டுப்பாடு அதிகரித்துக் காணப்படுகிறது.



இது தொடர்பில் அரசு இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தரமான மருந்து இன்மையால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமாக இருக்கும்.

வைத்தியர்கள், விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதால் ஏற்படும் வெற்றிடங்கள் தவிர்க்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தும்.

மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்துகளைப் பாவனைக்கு உட்படுத்துவது, மருந்துகள் கொள்வனவு செய்யக் கூடிய விலைகளில் இல்லாமை, வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவன என்பன பல முன்மொழிவுகள் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

முன்மொழிவுகளை ஆராய்ந்து அதன்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரமானதும், இலவச சுகாதாரத்தை வழங்குவதும் அரசின் கடற்பாடு ஆகும்.–என்றார்.

# கலா ஓயா பாலத்தில் முதலைகள் சஞ்சாரம்

புத்தளம் எலுவாங்குளம் கலா ஓயா பாலத்தில் முதலைகள் சஞ்சரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அப்பகுதியில் குளிப்பதற்கு வருகை தரும் பொதுமக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு எலுவாங்குளம் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த பாலத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் சுமார் ஏழரை அடி நீளமுடைய முதலையொன்று சஞ்சரித்தைக் காணக் கூடியதாக இருந்தது.

# தனுஷ்கோடியில் அகதியாக தஞ்சமடைந்த இலங்கையர்

## பொலிஸார் தீவிர விசாரணை

இலங்கையில் இருந்து மரப் படகு மூலம் சென்ற ஒருவர், னுஷ்கோடியில் அகதியாகத் தஞ்சம் அடைந்துள்ளார்.

அவரைப் பொலிஸார் மீட்டு தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவரிடம் தீவிர விசாரணை இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.





## சாய்ந்தமருது பிரதேசத்தில் கடலரிப்பு:

# நடவடிக்கை எடுக்கக் கோரிய மக்கள் வீதியை மறித்து இன்று ஆர்ப்பாட்டம்!

**(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான், பாறுக் ஷிஹான்)**

சாய்ந்தமருதில் கடலரிப்புக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி கடற்கரை வீதியை மறித்து தோணிகளை வீதிக்குக் குறுக்கே விட்டு மக்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் கடலரிப்புக்குத் தீர்வு காணுமாறு சாய்ந்தமருது மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் காலநிலை மாற்றம் காரணமான கடும் கடலரிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.

இதில் சாய்ந்தமருது கடற்கரைப் பகுதி கடலரிப்பு அதிகமாக இடம்பெற்று வரும் பகுதியாக உள்ளது.

இதனால் மீனவர்களின் ஓய்வு அறைகள், வாடிகள், பள்ளிவாசல்கள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மீனவர்களின் தோணிகள் வலைகள் கடலரிப்பால் கடலுக்குள் இழுத்து செல்லப்படுகின்றன.

கடலரிப்பினை தடுப்பதற்காகக் கரையோரம் பேணல் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளதுடன் பாரிய கற்களும் வெளியிடங்களில் இருந்து கனரக வாகனங்களின் உதவியுடன் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனால் இக்கற்கள் தமது மீன்பிடி தொழிலை பாதிப்புறும் வகையில் போடப்பட்டுள்ளன என்றும் கற்களில் மோதி தமது தோணிகள் உடைந்துள்ளன என்றும் மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

போராட்டத்தை சாய்ந்தமருது பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மீனவர்களுடனான கலந்துரையாடல் நேற்று சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

அதிக மீன் உற்பத்தியை கொண்ட இந்த பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளை கள விஜயம் மேற்கொண்டு கேட்டறிந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் நகர திட்டமிடல், கரையோரம் பேணல், கரையோர பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணாண்டோவை தொடர்பு கொண்டு விளக்கி அவசரமாக இந்த பிரச்சினைக்கான நிரந்தர தீர்வின் அவசியம் தொடர்பில் வலியுறுத்தினார்.

மீனவர்களின் குறைநிறைகள் பற்றிய விடயங்களை களத்தில் நின்ற மீனவர்களுடனும், கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய ஹரீஸ் எம்.பி., கரையோரம் பேணல் திணைக்கள பிராந்திய பொறியலாளருடன் தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிக் கேட்டறிந்தார்.

அத்துடன் கடற்கரைப் பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## தமிழ்க்கட்சி...

தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கடிதத்துக்கு ஒரு கட்சியின் தலைவர் மாத்திரமே ஆதரவு தெரிவித்து பதில் அளித்துள்ளார் எனவும், ஏனையவர்கள் இதுவரை பதில் வழங்க வில்லை எனவும் விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போது மேலும் கூறியதாவது:–

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியாவில் சந்திப்பதற்கு அனுமதி கேட்டால் என்ன என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டுத்தான் நான் மின்னஞ்சல் மூலமாக எங்களுடைய கட்சித் தலைவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளேன்.

மேலும், மூன்று நாட்களுக்குள் அவர்களிடம் இருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும் கூறியிருந்தேன். அதனைச் சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) மட்டும்தான் வரவேற்று டில்லிக்குச் சென்று அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மட்டுமே கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் எனப் பதில் வழங்கினார். இது தொடர்பில் மற்றவர்களிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

மேலும் சம்பந்தனிடம் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இருந்தும் எந்தப் பதிலும் வரவில்லை. மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) பற்றி கேள்விப்பட்டபோது இது தொடர்பில் என்னுடன் பேசுவதாகக் கூறியிருந்த நிலையில் எந்தப் பதில்லும் இதுவரை கிடைக்க வில்லை.

சித்தார்த்தன் (புளொட்) மற்றும் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ) என்பவர்களுடைய கருத்துக்கள் என்னவென்று தெரிய வில்லை. சிறிகாந்தாவும் (தமிழ்த் தேசியக் கட்சி) இது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

இதற்கிடையில் கஜேந்திரகுமாரை (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) இவற்றில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என ஒருவர் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அவ்வாறு சேர்க்காமல் விடுவது பிழை என்றும், அவர் தமிழ்த் தேசியத்துக்குத் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வந்திருக்கின்றார். எங்களுடைய கருத்துக்களுக்கு மாறாக கருத்துக்களைத் தெரிவிப்பவர்களைத் துரோகி என்று சொல்வதை நிறுத்த வேண்டும்.

மேலும், சமஷ்டி தேவை என்று இந்தியாவுக்குச் சென்று நாங்கள் சமஷ்டியைப் பற்றி கூறுவதில் பயனில்லை. 13ஐ நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறுவது அவர்களுடைய உரித்து.

ஐக்கிய நாடுகள் சபையிலும் 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து இந்தியத் தரப்பினர் தெரிவித்திருக்கின்றார்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தில் தமிழ் மக்களுக்காகக் கையெழுத்திட்டவர்கள் அவர்களே தவிர தமிழ்த் தலைவர்கள் எவரும் 1987ஆம் ஆண்டு உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை.

ஆகவே, 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஒன்று சேர்ந்து இந்தியாவிடம் கோருவது நன்மை தரும் என்றும் ஒரு பத்திரிகை கூறியுள்ளது. ரணில் எதுவும் தரமாட்டார் என்று நாங்கள் கூறியிருந்தோம். ஆகவேதான் இந்தியாவுக்குப் பின்னால் ஓடுகின்றோம் என்று கூறுகின்றார்கள். அப்படி அல்ல, ரணில் எமக்குக் கூறியுள்ளது தான் கியூபா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் போய் வந்த பின்னர் செய்வதாகக் கூறியிருந்தார். அவர் வந்து இதனைச் செய்வாரோ தெரிய வில்லை.

மேலும், எந்தவொரு அரசியல்வாதிகளும் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பிரித்து கொடுக்க முன்வரவில்லை. அடுத்த தேர்தலில் தங்களுக்கு வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்று நினைக்கின்றார்கள். நாங்கள் ஓரளவாவது தமிழ் மக்களுடைய உரிமைகளை பற்றி சிந்திக்கக்கூடியவர்களை இனங்கண்டு அவர்களுடன் இணைந்து பயனிக்கக் கூடிய நிலையில் உள்ளோம்

சில சிங்கள சக்திகள் அரச அதிபர், மாவட்ட செயலாளர், கிராமசேவகர்கள் போன்றவர்களைத் திரும்பவும் தமிழர்களுக்குக் கொடுக்காதீர்கள் என்ற முறையில் ரணிலுக்கு உபதேசம் செய்துள்ளனர். அவ்வாறு செய்தீர்களானால் தமிழர் மீது எங்களுக்குக் கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும் என்றும் அவர்கள் பேசியுள்ளனர்.

அரசியல் ரீதியாக சிந்திக்கும் ஜனாதிபதி கட்டாயமாக இதனைக் கருத்தில் எடுக்க வேண்டும்.

ஆகவே, எங்களுடைய பங்கில் இதனை வலியுறுத்திக்கொண்டுதான் வரப்போகின்றோம். அதேநேரத்தில் இந்தியாவினுடைய அனுசரணைகளையும் அவர்களுடைய நெருங்குதல்களையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதன் காரணமாக நாங்கள் இந்தியா சென்று பிரதமர் மோடியுடன் கலந்துரையாடவுள்ளோம்". – என்றார்.

## திருகோணமலை...

பிரதான வீதியில் ஒன்றுகூடி கைகளில் பதாதைகளைத் தாங்கியவாறு, மக்கள் எதிர்ப்புக் கோஷங்களை வெளிப்படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தியது மாத்திரமல்ல நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும், சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தார்கள்.

அவர்கள், "திருகோணமலை தமிழரின் தலைநகர்", "தியாகி திலீபன் அகிம்சையின் அடையாளம்", "தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் இறந்தவர்களை வழிபடத் தடையா?", "போராடுவோம் போராடுவோம்! தமிழ் மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்தும் போராடுவோம்", "ஐ.நா. சபையே தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?", "வடக்கு – கிழக்கு தமிழரின் தாயக பூமி", "நிறுத்து நிறுத்து அடாவடியை நிறுத்து" போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளைத் தாங்கியவாறு கோஷம் எழுப்பினார்கள்.

## சிறுபான்மை...

வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகின்றது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்? பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகின்றது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியைக் கேலிக்கூத்தாக்குகின்றது.

சட்டத்தின் ஆட்சியைப் பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகின்றோம்?" – என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தடைகோரி...

என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி அம்பாறை – பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு, திருகோணமலையில் நேற்று வலம் வந்த போது சிங்களக் காடையர் கும்பலால் தாக்கப்பட்ட நிலையில் வவுனியாவை வந்தடைந்தது.

இந்த ஊர்திப் பவனி வவுனியாவில் பயணித்தால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என இருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த ஊர்திப் பவனிக்குப் பொலிஸார் வவுனியா நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

அதனைக் கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## இரு பெண்கள்...

**- அப்துல் சலாம் யாசீம் -**

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது தாக்குதல் நடத்தியதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 14 பேரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இன்று கைதுசெய்யப்பட்ட 6 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் இன்று இந்தச் சந்தேக நபர்களை ஆஜர்படுத்தியபோதே இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்துக் கைதான 6 சந்தேகநபர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர். சந்தேகநபர்கள் அறுவரும் 35 இற்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

இதேவேளை, சந்தேகநபர்களுக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# இலங்கையின் கல்விக் கொள்கையில் விரைவில் புதிய மாற்றம் அறிமுகம்

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ தெரிவிப்பு

கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்குத் தேசிய கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது என்று இலங்கையில் உயர் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்குப் பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் தலைவர் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

போட்டித் தன்மை கொண்ட கல்வி முறையொன்று இருக்கும் வரையில் நல்லொழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது.

தொழிற்பயிற்சிக் கல்வி நாட்டின் தற்போதைய தேவை. பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் அந்த நிறுவனங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் கல்வி, உயர் தரத்தில் உள்ளது. ஆனால், அவற்றில் நம் பிள்ளைகள் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இன்றிருக்கும் போட்டித் தன்மையான கல்வி முறை, குழந்தைகளின்



திறன், அறிவு மற்றும் புத்திசாலித்தனத்தை வளர்க்கப் பயிற்றுவிப்பதில்லை. தற்போது மனனம் செய்யும் வெறுமனே அறிவை மாத்திரம் வழங்கும் ஒரு கல்வி முறையே உள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பிரிசில் பரீட்சை, ஆரம்பத்திலேயே ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்துகின்றது. இந்தப் போட்டியால் குழந்தைகளிடையே வெறுப்பும், விரக்தியும் எழுகின்றது.

பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றாலும், மறுபுறம் மானிடப் பண்புகளில் வளர்ச்சி ஏற்படுவதில்லை. மேலும், சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும் போட்டி நிலவுகின்றது.

போட்டித் தன்மையைக் கொண்ட கல்வி முறை இருக்கும்வரை, நாட்டுக்காக ஒரு தன்னலமற்ற சமூகத்தை உருவாக்குவது கடினம்.

உலகில் வளர்ந்த நாடுகளில் உள்ள கல்வி முறையைப் பார்த்தால் சாதாரண தரம் போன்ற பரீட்சைகள் நடைபெறுகின்றன.

ஆனால் புள்ளி வழங்கும் முறை இல்லை. ஒவ்வொரு பிள்ளையையும் சித்தி அடையச் செய்வதுடன், குறைந்த புள்ளிகளைக் கொண்ட பிள்ளைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

சிறந்தக் கல்வியைக் கொண்ட நாடாகத் தரவரிசையில் முன்னிலையில் உள்ள பின்லாந்தில் 1970 இல் நம் நாட்டில் இருந்த அதே கல்வி முறையே உள்ளது.

பிள்ளைகளுக்கு ஓய்வுடன் கூடிய மனநிலை இருக்கவில்லை என்றால், அறிவைப் புரிந்துகொள்வது கடினம். பல நாடுகளில் பிரத்தியேக தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை.

ஆனால் அவர்கள் கல்வி நிலையில் வெற்றிகரமாக உள்ளனர். போட்டியின் பின்னர் பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களுக்காக, பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமையை முன்பள்ளி மேம்பாட்டுக்கும் வழங்க வேண்டும் என்று நாம் பரிந்துரைத்துள்ளோம்.–என்றார்.




# 230 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

( வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன், பெரியநீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த 230 மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்த ஜீ மகராஜ் அருளுரை வழங்கி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது சிங்கள பொலிஸ்...!

இந்த நாட்டின் இராணுவம் போல பொலிஸும் 'இலங்கைப் பொலிஸ்'அல்ல, 'சிங்களப் பொலிஸ்'தான் என்பதை நிரூபிக்கும் விதத்தில் அது நடந்து கொள்கின்றது.

'திலீபன் வழியில் வருகின்றோம்...!' என்ற தலைப்பில் தியாகி திலீபனின் உருவப்படத்துடன் முன்னெடுக்கப்பட்ட தூபி தாங்கிய ஊர்தி மீது நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல் தொடர்பில் சிங்களப் பொலிஸ் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் அதனைத்தான் நிரூபித்து நிற்கின்றன.

நாட்டின் மிக உயர்ந்த சபையான நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினர் வழிமறிக்கப்பட்டு, வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு, தாக்கப்பட்ட போது இலங்கைப் பொலிஸார் நடந்து கொண்ட விதம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் சுட்டிக்காட்டிய படி தமிழ் மக்கள் விடயத்தில் சிங்களப் பொலிஸின் நடவடிக்கையாகவே உள்ளது என்பது அப்பட்டமாக வெளிப்படும் உண்மை.

இந்தத் தாக்குதல் வேண்டுமென்றே முன்னெடுக்கப்பட்ட ரவுடிகள் கூட்டத்தின் அராஜகம். திட்டமிட்டு காத்திருந்து முன்னெடுக்கப்பட்டது. உயிரிழந்தவர்களை நினைவு கூரும் உரிமை நாட்டின் ஜனாதிபதியாலேயே அங்கீகரிக்கப்பட்ட நிலையில், அத்தகைய நினைவு கூரும் நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது சகாக்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

அஹிம்சை ரீதியில் போராடி, தன்னைத்தானே உணவு, நீரின்றி அணுவணுவாக கொன்று தற்கொடையாற்றிய ஓர் உத்தம போராளியின் நினைவு கூரல் மீது இந்தக் காடைத்தனம் - காட்டுமிராண்டித்தனம் - மிலேச்சத்தனம் - கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

அதுவும் தாக்குதல்கள் வீடியோ கமராக்களில் காணொலியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் தாக்குதல் நடத்திய காவாலிகளை கூண்டோடு விரைந்து கைது செய்வதற்கு பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால் கப்பல்துறைத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, வவுனியா பொலிஸார் எடுத்த நடவடிக்கை, இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊர்திப் பவனியை ஏற்பாடு செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கிளப்பிய சந்தேகத்தை உறுதி செய்திருக்கின்றது.

தாக்குதல் நடத்திய காடையர் கூட்டத்தைக் கைது செய்ய வேண்டிய பொலிஸார் அதைச் செய்வதை விடுத்து வவுனியாவில் நீதிமன்றுக்கு போய், திருகோணமலை, கப்பல்துறை சம்பவத்தைக் காட்டி, இந்த ஊர்தி வவுனியாவுக்குள் வந்தால் இனக் குழப்பம் வரும், அதனால் அதற்குத் தடை விதியுங்கள் என்று நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருக்கின்றனர்.

அதற்கு நீதிமன்றம் நீதி வழியில் செமத்தையாக பதில் கொடுத்திருப்பது ஒன்றே ஆறுதல் தரும் விடயம். நினைவு கூரும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்பை வழங்குங்கள் என்று நீதிமன்றம் பொலிஸாருக்குப் பாடம் எடுத்திருக்கின்றது.

கப்பல்துறையில் நடந்த தாக்குதலும், அதை வைத்து ஊர்திப் பவனிக்குத்தடை போடும் பொலிஸின் முயற்சியும் இத்தாக்குதல் புலனாய்வுப் பிரிவின் ஒட்டுமொத்த சதித்திட்டம் என்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் குற்றச்சாட்டில் ஆழமான விடயங்கள் பொதிந்திருப்பதையே உறுதிப்படுத்துகின்றன.

## அச்சிடுவதில் ஏற்பட்ட குறைபாட்டால் பழுதடைந்த அடையாள அட்டைகள்

2022 ஆம் ஆண்டுக்கான ஆட்பதிவு திணைக்களத்தால் அச்சிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகளில் 04 வீதமானவை பழுதடைந்துள்ளன.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், ஆட்பதத்திவு திணைக்களம் 6 லட்சத்து 28 ஆயிரத்து 973 தேசிய அடையாள அட்டைகளை அச்சிட்டுள்ளது.

இவற்றில், 22 ஆயிரத்து 407 பழுதடைந்துள்ளன எனறு கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தவறான அடையாள அட்டைகள் பி.வி.சி. மற்றும் பாலிகார்பனேட் அட்டைகளில் அச்சிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு வகையான அட்டைகள் மூலம் அச்சிடப்பட்ட குறைபாடுள்ள அடையாள அட்டைகளின் எண்ணிக்கையை தனித்தனியாக வழங்க திணைக்களம் மறுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, பழுதடைந்த அடையாள அட்டைகள் தொடர்பான எண்ணிக்கையை கணக்கிடுவதற்கான தகவல்கள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று தணிக்கை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹாட்லிக் கல்லூர் மாணவன் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பி.சரணிதரன் வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித் தின போட்டியின் மேல் பிரிவில் பாவோதல் நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## அத்தியாவசிய சேவைகளை பெயரிட்டு விசேட வர்த்தமானி

சில அத்தியாவசிய சேவைகளைப் பெயரிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சாந்தனி விஜயவர்தனவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு அத்தியாவசியமான சேவைகளுக்கு தடை அல்லது இடையூறு ஏற்படக்கூடும் என கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மின்சாரம் தொடர்பான அனைத்து சேவைகளும், கனிய எண்ணெய் உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம், மருத்துவமனைகள் உள்ளிட்ட சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.

மேலும், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற பொது நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, உணவளித்தல் மற்றும் சிகிச்சைக்கு தேவையான அல்லது செய்ய வேண்டிய அனைத்து சேவை, வேலை அல்லது உழைப்பு ஆகியவையும் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# கட்டுமானத் தொழில் வீழ்ச்சியடைந்தால் அதை நம்பியிருக்கும் மக்கள் பாதிப்புறுவர்

## வீடமைப்பு அமைச்சுச் செயலாளர் சுட்டிக்காட்டு

கட்டுமானத் தொழில் விழ்ச்சியடைந்தால் குறித்த துறை சார்ந்த மக்களது இயல்பு வாழ்வில் பாதிப்பு ஏற்படும். நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவை மாற்றியமைக்கத் தேவையான 13 அவசர யோசனைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்ததாரர்களின் கட்டுமான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான களுத்துறை மாவட்ட ஆலோசனை சேவைகள் நடமாடும் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொண்ட போதே அமைச்சின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சி களுத்துறை தொடங்கொட பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த விடயம் தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

இவ்வருட வரவு, செலவுத் திட்டத்தின் படி, நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் அமைச்சின் செயலாளரால் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த ஆண்டு பட்ஜெட்டில் கட்டுமானத் தொழிலை மேம்படுத்த தேவையான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும்.

இந்த நாட்டின் மக்கள் தொகையில் 20 வீதம் பேர் கட்டுமானத் தொழிலை நம்பி உள்ளனர். எப்படியாவது நிர்மாணத்துறை வீழ்ச்சியடைந்தால், நாட்டின் மொத்த சனத்தொகையில் ஐந்தில் ஒருவரது வாழ்க்கை முடக்கப்படும்.

இந்த நாட்டில் நிர்மாணத்துறையை உயர்த்துவதற்குத் தேவையான பணிகளை ஜனாதிபதி தலைமையிலான அரசு தற்போது செய்து வருகிறது. நிர்மாணத்துறையை உயர்த்துவதற்குத் தேவையான நிதி மற்றும் நிதி அல்லாத தீர்வுகளை வழங்க அரசு செயற்பட்டு வருகிறது.

இந்த நாட்டில் கட்டுமானத் துறைக்கு பொறுப்பான ஒரே அமைச்சரவை அமைச்சு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மட்டுமே. கடந்த காலங்களில் நிர்மாணத்துறை தொடர்பில் ஆராய அமைச்சுக்களின் செயலாளர்கள் தலைமையில் 6 பிரதான குழுக்களை ஜனாதிபதி நியமித்தார். குழுக்கள் கூடி இதற்கான சாத்தியமான தீர்வுகள் குறித்து ஆலோசித்தன. அதற்கு ஜனாதிபதி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் ஆதரவு கிடைத்தது. இதன்படி, நாட்டில் நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய 50 முன்மொழிவுகளை அடையாளம் காண முடிந்தது. இதில் 13 முன்மொழிவுகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் என்று ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கட்டுமானத் துறையை புதிய திசையில் திருப்புவதற்குத் தேவையான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என நம்புகிறோம்.– என்றார்.



# வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு 'டயாலிசிஸ்' இயந்திரம் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் மிக நீண்ட நாள் தேவையாகக் காணப்பட்ட (Dialysis Machine) டயாலிசிஸ் இயந்திரம் ஒன்றை நாசிவன்தீவு ஈஸ்ட் லங்கா பொலிசெக் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ்.முஹம்மது சனூன் அன்பளிப்புச் செய்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நன்மை கருதி இந்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தின் பெறுமதி சுமார் 3.1 மில்லியன் ரூபாவாகும்.

நன்கொடையாளரின் இக்குறிப்பிடத்தக்கஉதவியானது, நோயாளர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் பெரிதும் பயனளிக்கும் ஒன்றாகும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நன்கொடையை வழங்கியதற்காக நன்கொடையாளருக்கு நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

இந்த உதவி கிடைப்பதில் உறுதுணையாக இருந்த மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ.சுகுணனுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் மதன் தெரிவித்துள்ளார்.

# அமைதியான, ஒற்றுமை மிகுந்த அரசியலை தொடர வேண்டிய நேரத்தில் முஸ்லிம் மக்கள்

## ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினர் கலீலூர் ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் பயங்கரவாதம் மற்றும் தீவிர வாதத்துக்கு எதிராக முஸ்லிம் இளை ஞர்களை ஒன்று திரட்டினார். இன்று, அவரது தத்துவத்தை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறும் சொல்லாட்சித் தலைவர்கள் காட்டிய தவறான முன்னு தாரணங்களால் முஸ்லிம் இளைஞர்கள் வழிதவறி முஸ்லிம் சமூகத்தின் மீது கரும்புள்ளியை ஏற்படுத்தும் விதமாக செயற்படுகிறார்கள்.

இதிலிருந்து விடுபட்டு முஸ்லிம் சமூகம் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் இறுதி நேரத்தில் தேடிய அமைதியான ஒற்றுமை மிகுந்த அர சியலைத் தொடரவேண்டிய நேரத்தில் முஸ்லிம்கள் உள்ளனர்.

இவ்வாறு கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பின



ருமான ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான் தெரிவித் துள்ளார்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் நினைவேந்தலை அடுத்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கையர்களாகிய நாம் 1948 இல் சுதந்திரம் பெற்றபோது தமிழ்த் தலைவர்கள் 50 இற்கு 50 என்று தமது இன நிலைப்பாட்டை வெளியிட்ட போது சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ முஸ்லிங்கள் தயாராக உள்ளனர் என்று எங்கள் அரசியல் தலைவர்களான டி.பி.ஜாயா போன்ற தலைவர்கள் சொன்னார்கள்.

அதே அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்த முன்னாள் அமைச்சர் எம்.எச். எம். அஷ்ரபின் மரணத்தின் பின்னர் முஸ்லிம் அரசியல் வியாபாரமாக மாறியது. அவரது பாசறையில் பயின்ற அரசியல்வாதிகள் பல குழுக்களாகப் பிரிந்தனர். முஸ்லிம் சமூங்கத்தின் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பு சீரழித்தமையே சஹரான் போன்ற புல்லுருவிகளுக்கு முஸ்லிங்களை பலியிட சாதகமாக அமைந்தது.– என்றார்.



# மன்னார் தாராபுரம் பாடசாலையின் புதிய அதிபர் நியமனத்துக்கு எதிர்ப்பு

## இன்று காலை போராட்டம் நடத்தினர் மக்கள்

(மன்னார் நிருபர்)

மன்னார் வலயக்கல்வி பணி மனைக்கு உட்பட்ட தாரபுரம் அல்மினா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை அதிபர் தகுதியைப் பூர்த்தி செய்து நேர்முக தேர்வில் கலந்து கொண்ட தாராபுரம் கிராமத்தை சேர்ந்த அதிபரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் தாராபுரம் அல்மினா பாடசாலைக்கு முன் பகுதியில் உள்ள வீதியில் இன்று ஊர்மக்கள் பலர் இணைந்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈட்பட்டனர்.

புதிய அதிபர் நியமனத்திலும் பதவி காலம் நிறைவடைந்தும் நிர்வாகத்தில் இருக்கும் பழையமாணவர் சங்கம்



மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங் கத்தின் தலையீடு காரணமாகவே தகுதி வாய்ந்த தங்கள் கிராமத்தை சேர்ந்த அதிபர் நியமிக்கப்படவில்லை எனவும் இதன்போது தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் தாங்கள் எழுத்து மூல மகஜர் ஒன்றை உயர் அதிகாரிகளி டம் கையளித்தனர் என்றும் குறித்த மகஜர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரி வித்திருந்தனர்.

எனவே இந்தப் பிரச்சினை தொடர்பில் மன்னார் வலய கல்வி பணி மனை மற்றும் சம்மந்தப்பட்ட அதி காரிகள் தலையீடு செய்ய வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.





# காட்டு யானைத் தொல்லை பாலமுனையில் அதிகரிப்பு

(றியாஸ் ஆதம் )

பாலமுனை ஹிறா நகர் மீள் குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது. அங்கு வசித்து வரும் மக்கள் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாளாந்தம் மாலை வேளையானதும் ஹிறா நகர் கிராமத்துக்கு அண்மையிலுள்ள முள்ளிக்குளத்து மலையடிப் பிரதேசத்தை சூழவுள்ள காட்டுப் பிரதேசத்துக்கு உணவுக்காக யானைகள் வருகின்றன. இவை இரவு வேளைகளில் காடுகளுக்குள்ளிருந்து வெளியில் வந்து வயல் பிரதேச வீதியால் வருகின்ற விவசாயிகள் மற்றும் பொது மக்களை துரத்தி தாக்க முற்படுகின்றன.

அத்துடன் கிராமத்துக்குள் உட்புகுந்து வீடுகளை உடைத்து சேதப்படுத்தியும் வருகின்றன. வீட்டுத் தோட்டங்களிலுள்ள வாழ்வாதார பயிர்களையும், வீட்டுத் தோட்டப் பயிர்களையும் அழித்து துவம்சம் செய்கின்றன.

நேற்று ஹிறா நகர் கிராமத்துக்குள் புகுந்த யானைகள் வீடு ஒன்றை உடைத்து உடமைகளையும் வீட்டுத் தோட்ட பயிர்களையும் சேதப்படுத்த யுள்ளன.

இதேவேளை வீட்டிலுள்ளவர்கள் மயிரிளையில் உயிர் தப்பியுள்ளனர்.

அண்மைக்காலமாக பாலமுனை ஹிறா நகர் மீள் குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் அப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக தங்களது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து செல்லக் கூடிய சூழ்நிலைக்கும் ஆளாகியுள்ளனர்.

காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து தங்களையும் தங்களது உடைமைகளையும் பாதுகாக்குமாறு கிராம மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.



# காத்தான்குடி ஆஸ்பத்திரியில் கண் சத்திரசிகிச்சைத் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் நிவாரண, மனிதநேய உதவிகளுக்கான மையத்தின் ஏற்பாட்டில் சவுதி தமாம் சர்வதேச கண் பார்வை அமைப்பின் உதவியுடன் இலங்கையில் கண் பார்வைக்குறைபாட்டு நோயினைக் குறைப்பதற்கான சவுதியின் 'அந்நூர்' இலவசத் திட்டம் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எஸ்.எம்.ஜாபீர் தலைமையில் அண்மையில் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர், கௌரவ விருந் தினராக ஜம்மியதுஸ்ஸபாப் நிறுவனத்தின் பணிப்பாளர் தாஸிம் மௌலவியும் கலந்து கொண்டனர்.

# தீர்மானங்களை எடுக்கக் கூடிய மனஉறுதி மாணவரிடம் இல்லை

## தென்மராட்சி வலய தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஈஸ்வரன் தெரிவிப்பு

(த.சுபேசன் )

தீர்மானங்களை எடுக்கக்கூடிய மன உறுதி எம் மாணவர்கள் மத்தியில் இல்லை அதனால்தான் வடக்கு மாகாணத்தில் இருந்து மூன்று பொறியியலாளர்களை இழந்து விட்டோம்.

இவ்வாறு தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் க.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமம் நட்சத்திரமஹாலில் இடம்பெற்ற மூச்சு குறுந்திரைப்பட ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

ஈழத்தில் இருந்து குறும்படங்கள் வெளிவருகின்ற போதிலும் அதனை பலரும் விரும்பிப் பார்ப்பதில்லை.

இந்தியாவில் இருந்து வெளிவரும் படைப்புக்களையே அதிகம்



கொண்டாடுகின்றோம். குறும்படங்கள் ஊடாக சமுதாயத்துக்குப் பல செய்திகள் கிடைக்கின்றன.

இந்தத் திரைப்படம் மற்றும் குறும்படக் காட்சிகள் மக்கள் மனங்களில் இலகுவில் தொற்றிவிடக் கூடியன. எனவே குறும்படங்கள் ஊடாக மாணவர்களது மனங்களில் நல்ல செய்திகளை விதைக்க வேண்டும்.

இன்று மாணவர்கள் புத்தகப் படிப்பை மாத்திரமே நம்பி இருக்கின்றனர். ஆனால் அதனைப் பல்கலைக்கழகத்திலும் தொடர முடிவதில்லை. அதனால் தான் இந்த தற்கொலை முடிவை எடுக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் மூன்று பொறியியலாளர்களை அண்மையில் இழந்து விட்டோம். இதற்கு காரணம் அடுத்த பரீட்சையை எப்படி எதிர்கொள்வது என்ற மனப் பயமே.

சுயமான கற்றல் முறைமையை பாடசாலைக் கல்வியில் இருந்து தொடராததன் விளைவை இன்று எதிர்கொள்கிறோம்.

இலங்கையின் முன்னாள் கல்வி அமைச்சர் அண்மையில், இலங்கையில் தொழில்வாய்ப்புக்கள் ஏராளம் காணப்படுகின்ற போதிலும் பலரும் அதற்கான திறன்களை கொண்டிருப்பதில்லை எனக் கூறியிருந்தார்.

இன்று சாதாரண தரம் சித்தியடையாவிட்டாலும் கூட உரிய தொழில் பயிற்சி ஊடாகச் சிலர் தனியார் துறையில் கை நிறையச் சம்பாதிக்கின்ற நிலையை காண முடிகின்றது. கல்வி வேறு அறிவு வேறு.அறிவை எப்படியும் வளர்த்துக்கொள்ள முடியும்.–என்றார்.




# பாரிசவாத நோயாளியின் நிறை அளவிட இயந்திரம்

( வி.ரி.சகாதேவராஜா)

பாரிசவாத நோயாளியின் நிறையை அளவிடக் கூடிய டிஜிட்டல் இயந்திரம் ஒன்று கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரத்தை ,லண்டனில் வாழும் இலங்கையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் காந்தா நிரஞ்சன் வழங்கியுள்ளார்.

இது நான்கு லட்சம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தேவை கருதி பாரிசவாத சிகிச்சை பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் என். இதயகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். இரா. முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் இது அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கையளிப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜே . மதன், பொது வைத்திய நிபுணர்களான டாக்டர் என். இதயகுமார் மற்றும் டாக்டர் எம். என். எம்.சுவைப், தாதிய பரிபாலகி திருமதி எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நாட்டாரியல் என்பது நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் விழுமியங்கள் நம்பிக்கைகள் இலக்கியங்கள் கதைகள் பாடல்கள் பழமொழிகள் சடங்குகள் போன்றவற்றை சேகரித்து வகைப்படுத்தி தொகுத்து ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்தும் துறையாகும்.

மேலும் விரிவாக கூறுவதென்றால் மரபுகள் நம்பிக்கைகளைத் தாண்டி வாழும் கிராமத்து மக்களது விளிம்பு நிலை வாழ்வியலை அச்சொட்டாக எடுத்துக்காட்டுவதே நாட்டாரியல்.



# தம்பாட்டி பிரதேசத்தின் பண்டார வன்னியன்

நாட்டாரியல் மூலமாகத்தான் ஒவ்வொரு மனிதனும் தமது பரம்பரை அல்லது தமது மூதாதையர் கடந்து வந்த வரலாற்றை அறிய வேண்டியுள்ளது. எமது உரிமைகள் எமது இருப்பு எமது பண்டைய வரலாறுகள் பல அரசியல் பின்புலங்களால் இன்று கேள்விக் குறியாகியுள்ள நிலையில் நாம் காலம் காலமாகப் பின்பற்றி வரும் எமது மரபுசார் அடையாளங்கள் மூலமாகத்தான் அவற்றை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். இன்று பல கோடி வசூலை சம்பாதிக்கும் சினிமா பாடல்கள் கூட நாட்டார் பாடல்களை ஊடறுத்து சென்றவைதான்.

இலங்கையை ஆண்ட இறுதி தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் என்று வரலாறு கூறுகின்றது. எனினும் பண்டார வன்னிய மன்னன் தமிழரா? சிங்களவரா? என்ற கேள்விகளும் ஒரு சாரரால் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்துறை பிரதேசத்தில் தம்பாட்டி எனும் இடத்தில் காந்திஜி நாடக மன்ற குழுவினரால் காலம் காலமாகப் பண்டார வன்னியன் கூத்து மேடை ஏற்றப்பட்டு வருகின்றது. எனவே இவ்வாறான சில ஆதாரங்கள் மூலமாகத்தான் எமது வரலாற்றுக்கான ஆவணங்களைச் சேமித்து வைக்க வேண்டியுள்ளது.

பாயும் புலி பண்டாரவன்னியன் என்பவன் வன்னி நிலப்பரப்பிலே வெள்ளையர்களுக்கு எதிராக நின்று தமிழ் மண்ணை ஆண்ட இறுதி மன்னன். பண்டார வன்னியன் ஒரு சிற்றரசன். இவரது முழு பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். பண்டாரவன்னியன் முல்லைதீவிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயில் வரையுள்ள 2000 சதுர மைல் நிலப்பரப்பை ஆட்சி செய்த தமிழ் மன்னன். அமைச்சர்களாகத் தனது தம்பி கைலாய வன்னியனையும் தளபதியாக கடைசி சகோதரன் பெரிய மைனரையும் கொண்ட

குழுவையும் அமைத்து அரசமைப்பை பேணி வந்தான். அவனுக்கு ஒரே சகோதரி. அவரது பெயர் நல்ல நாச்சாள். நல்லநாச்சாள் பார்ப்பதற்கு மிக அழகான பெண்ணாகக் காணப்பட்டார். அவள் கலைகள் கற்பிக்கும் அவை புலவன் மீது காதல் கொண்டாள். இதே நேரத்தில் வன்னி நிலத்தை ஆண்டு வந்த குறுநில மன்னனான காக்கை வன்னியன் நல்ல நாச்சியாரை மணம் புரிய ஆசைப்பட்டான். அதற்காக பலமுறை பண்டாரவன்னியனிடம் ஓலை அனுப்பிய போதும் அவன் அதற்கு சம்மதிக்கவில்லை.

ஒரு முறை நந்தவனத்தில் நல்ல நாச்சாள் புலவரிடம் காதல் கொண்டிருக்க கண்ட காக்கை வன்னியன் புலவரிடம் சண்டைக்கு போக புலவர் வாள் சண்டையிட்டு நைய புடைத்து அனுப்பி விட்டார். இந்த சம்பவத்தால் புலவன் அரச பரம்பரையில் இருந்து வந்தவன் என்பதை அறிந்து அவர்களின் காதலுக்கு பண்டார வன்னியன் சம்மதம் தெரிவிக்கின்றான். வன்னியில் பண்டாரவன்னியன் திறை செலுத்த மறுத்த காரணத்தால் வெள்ளையர்கள் படையெடுத்து வந்து வெற்றிக்கான முடியாமல் புறமுதுகுகாட்டி பின் வாங்கினர். தனிப்பட்ட ரீதியாகவே பண்டார வன்னியனோடு பகை கொண்ட காக்க வன்னியன் வெள்ளையர்களுடன் கூட்டு சேர்ந்து கொள்கின்றான். பலமுறை பண்டார வன்னியனோடு போரிட சென்று வெள்ளையர்கள் தோல்வியையே சந்தித்தார்கள்.

இவ்வாறான சமயத்தில் பண்டாரவன்னியனைத் தந்திரத்தால் மட்டுமே வெல்ல முடியும் என்று காக்கை வன்னியன் வெள்ளையர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்கின்றான். பலமுறை பண்டார வன்னியனோடு போரிட சென்று வெள்ளையர்கள் தோல்வியையே சந்தித்தார்கள். இவ்வாறான சமயத்தில் பண்டாரவன்னியனைத் தந்திரத்தால் மட்டுமே வெல்ல முடியும் என காக்கை வன்னியன் வெள்ளையர்களுக்கு ஆலோசனை கூறுகின்றான்.

அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகதான் திருந்தி விட்டதாக பொய் கூறி பண்டார வன்னியனோடு சேர்ந்து கொள்கின்றான். தம்பிமார்களான மந்திரியும் தளபதியும் காக்கை வன்னியனை தம்மோடு சேர்க்க வேண்டாம் என்று கூறியும் மறப்போம் மன்னிப்போம் என்ற உயர் கொள்கை கொண்ட பண்டார வன்னியன் காக்கை வன்னியனை இணைத்துக் கொள்கின்றான். பின்னர் வெள்ளையர்களோடு இணைந்து சதித்திட்டம் தீட்டி மன்னனை தனியாக கூட்டிச் சென்று கண்டியில் ஒரு இடத்தில் வைத்துக் கொலை செய்யபடுகின்றான். இதுதான் பண்டார வன்னியன் நாடகத்தின் கதை சுருக்கமாக கூறப்படுகின்றது.

இந்தப் பண்டார வன்னியன் கூத்தானது ஆரம்ப காலங்களில் கூத்தாக நிகழ்த்தப்பட்டாலும் தற்போதைய காலங்களில் இவை ஒரு மேடை நாடகமாகத்தான் ஆடப்படுகிறது. .பண்டார வன்னியன் நாடகத்தில் வசனம், கதை, பாடல் என மூன்றுமே இணைந்துவரும். இவை எல்லாமே ஆரம்ப காலத்தில் இருந்தே மூதாதையர்களிடமிருந்து வாய்மொழி மரபாகத்தான் பேணப்பட்டு வருகின்றது. இந்த நாடகத்தை ஆரம்பித்தவர் இவர்தான் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. இது மரபு வழியாக பேணப்பட்டவரும் பேணப்பட்டுவரும் ஒரு நாட்டார் ஊடகமாகும். நாடகமானது தென்மோடி வடமோடி என்ற பிரிவுகுள் அடங்காமல் பிரத்தியேகமாக முல்லை மோடி என்ற தனிப்பாணியில் அமையப்பெற்றதாக கூறப்படுகின்றது.

தொலைக்காட்சி, தொலைபேசி, இணைய வசதிகள் எதுவுமே இல்லாத காலப்பகுதியில் மக்களை இணைக்கும் ஒரு கருவியாகக் கூத்துக்களே காணப்பட்டன என்றால் அது மிகையில்லை. அவ்வாறான காலகட்டத்தில் ஒவ்வொரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தம்பாட்டி பிரதேசத்தின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிகளுக்கும் திரை திறக்கப்பட்டு மூடப்பட்டு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் மக்களைக் கவர்ந்து கொள்வதற்காக திரைகள் மூடப்படுவதில்லை. மேலும் நேரத்துக்கு ஏற்பும் காலத்திற்கேற்பவும் நாடகம் சுருங்கி விரிவடையகூடியதாக அரங்கேற்றபடுகின்றது.

தம்பாட்டி எனும் இந்தப் பிரதேசத்தை பொறுத்தவரையில் தாம் மூதாதையர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட இந்த கலைகள் அழிந்து விடக்கூடாது எனும் நல்லெண்ணத்தில் தாமாகவே முன்வந்து அடுத்த தலைமுறைக்கு இதனை பயிற்றுவிக்கின்றார்கள். இவர்கள் இந்தக் கூத்தை தமது பிரதேசத்துகுள் மட்டும் நிகழ்த்தாமல் பல வெளி மாவட்டங்களுக்கும் சென்று நிகழ்த்தியுள்ளார்கள். இந் நாடக கலைஞர்கள் கலாபூஷணம், கலை குரிசில், யாழ் முத்து போன்ற கலைஞர்களுக்கான உயரிய விருதுகளையும் பெற்றுள்ளார்கள்.

நாட்டார் கலைகள் என்னதான் சமூகத்தில் பெருமானம் மிக்க ஊடகமாக காணப்பட்டாலும் கூட அவற்றுக்கும் இருள் நிறைந்த பக்கங்களுண்டு. சமூகத்தில் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பையும் வரவேற்பையும் பெரும் கலைகளாக கூத்து வடிவங்கள் காணப்படுகின்றன. நாட்டார் கலைஞர்களும் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் நான் இந்த கூத்துக்களை அரங்கேற்றி வருகின்றார்கள். பண்டாரவன்னியன் கூத்தும் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில்தான் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. தமது மூத்த கலைஞர்கள் விட்டு சென்ற பாரம்பரிய சொத்தை தங்களோடு அழிந்து போய் விடக்கூடாது என்பதற்காக அடுத்த தலைமுறைக்கும் பயிற்றுவிக்கும் உயரிய நோக்கில் இக்கூத்து கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே கூத்துக்களை வளர்க்கவும் அவற்றை பாதுகாக்கவும் இன்றைய இளைய சமுதாயம் முன்வர வேண்டும் எமது பாரம்பரிய அடையாள சின்னங்களை நாம் தான் பாதுகாப்பான முறையில் ஆவணப்படுத்தி வைக்க வேண்டும். எனவே இது போன்ற கூத்துக்களையும் நாடகங்களையும் இனிமேலாவது இளைய சமுதாயத்தினர் கையிலெடுத்து அவற்றை அழிய விடாமல் பேணி காப்போம்.

**உதயகுமார். ரதிகலா**
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ் பல்கலைகழகம் .

## ஆலய திருத்த வேலைகளுக்கு யாசகர் 2 லட்சம் ரூபா வழங்கல்

யாழ்ப்பாணம் வண்ணை வேங்கட ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபனம் நிகழ்ந்து. ஆலயமானது புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது.

அந்த வகையில் யாசகர் ஒருவர் தன்னால் யாசகம் செய்த நிதியில் இருந்து இரண்டு லட்சம் ரூபா பணத்தை ஆலய நிர்வாகத்தினரிடம் நேற்று (17) ஞாயிற்றுக் கிழமை வழங்கியுள்ளார்.





## மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல்-பஹ்ரியா மகா தேசிய பாடசாலையில் அம்பாறை மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் பாடசாலை அதிபர் எம்.எஸ். எம்.பைசால் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் போது பாவனையாளர் உரிமைகள் பொறுப்புக்கள் , சட்டங்கள் ,பாதுகாப்பு , பொருள்கள் கொள்வனவின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள், தற்போதைய சந்தையில் பொருள்களின் கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வு பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவு பொறுப்பாசிரியர் ஜானுன் நௌசாத் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வளவாளர்களாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட செயலக அம்பாறை புலனாய்வு உத்தியோகத்தர்களான இஸட்.எம்.ஸாஜீத், ஏ.பி.எம்.காமீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் விசா முறையில் மாற்றம் செய்யப்படும்!

## - அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் விவேக் ராமசாமி பரப்புரை



எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் எச் -1 பி விசா முறை ஒழிக்கப்பட்டு மாற்று ஏற்பாடு செய்யப்படும் என இந்திய வம்சாவளி அமெரிக்கரான விவேக் ராமசாமி பரப்புரை செய்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிடுகிறேன் என அறிவித்துள்ளார்.

குடியரசுக்கட்சியில் இருந்து வேறு எவரும் தன்னை எதிர்த்து போட்டியிடக் கூடாது என ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்துள்ளார். இந்த நிலையில், இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துக்கொண்டு ருத்து தெரிவிக்கையில்,

இந்தியாவில் மென்பொருள் துறையில் செயல்படும் அனைவரும் பொதுவாக விண்ணப்பிக்கும் இந்த விசாவானது, அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாட்டு ஊழியர்களை பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கின்றது.

இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு தொழில்நுட்ப நிறுவனங்கள் எச் -1 பி விசா முறையை நம்பியுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இந்த முறையை ஒழிக்க வேண்டும் என வாதிடும் விவேக் ராமசாமியும், இதுவரை 29 முறை இந்த விசா வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

விவேக் ராமசாமியின் 'ராய்வான்ட் சயின்சஸ்' நிறுவனத்தில் மொத்தம் 904 முழு நேர ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இதில் அமெரிக்காவில் 825 பேர்கள் பணியாற்றுகின்றனர். இவரது நிறுவனமே மொத்தம் 29 எச் -1 பி விசாக்களை பெற்றுள்ளது.

இது மட்டுமின்றி, அமெரிக்காவில் குடியேறிய தம்பதியின் மகனான விவேக் ராமசாமி, குடியேற்றக் கொள்கையில் கடுமையான மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று வாதிட்டது, பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

அமெரிக்காவில் அதிக எண்ணிக்கையில் விண்ணப்பிக்கப்படும் விசாவில் ஒன்று எச் -1 பி. 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் அமெரிக்க நிறுவனங்கள் மொத்தம் 780,884 விண்ணப்பங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்தது. ஆனால் எச் -1 பி விசா மொத்தமாக அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை என்பது 85 ஆயிரம் மட்டும் என்றும் விவேக் ராமசாமி தெரிவித்துள்ளார்.

# விசாக்களின் கட்டணத்தை உயர்த்தியது பிரித்தானியா

பிரித்தானியாவில் சுற்றுலா மற்றும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசாக்களின் கட்டணத்தை அந்நாட்டு அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

புதிய கட்டண கட்டமைப்பின் கீழ் ஆறு மாதங்களுக்கு குறைவான காலம் தங்குவதற்கான சுற்றுலா விசாவுக்கு கூடுதலாக 15 பவுண்டுகள் (இலங்கை மதிப்பில் 6000 ரூபா) உயர்த்தப் பட்டுள்ளது. மேலும் மாணவர் விசாவுக்கு கூடுதலாக 127 பவுண்டுகள் (50700 ரூபா) அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இங்கிலாந்துக்கு வெளியே அதாவது சர்வதேச மாணவர் ஒருவர் விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கான கட்டணம் 490 பவுண்டுகளாகவும் (196000 ரூபா), சுற்றுலா விசா 115 பவுண்டுகளாகவும் (46000 ரூபா) உயர்த்தப்பட்டுள்ளன என பிரித்தானிய உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பெரும்பாலான வேலை மற்றும் சுற்றுலா விசாக்கள் விலையில் 15 சதவீதமும் முன்னுரிமை விசா, படிப்பு விசா விலையில் 20 சதவீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளன என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விசா கட்டண உயர்வு எதிர்வரும் ஒக்டோபர் 4 ஆம் முதல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மாணவர் விசா விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு இந்த கட்டண உயர்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சூடானில் பதற்றம்: கட்டடங்கள் தீக்கிரை

சூடானின் அரச படையினருக்கும் கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையிலான மோதலில் சூடானின் தலைநகரரில் அமைந்துள்ள பல கட்டிடங்கள் தீக்கிரையாகியுள்ளன.

அத்துடன், தற்சமயம் நைல் நதிக்கு அண்மையில் காணப்படும் 18 மாடிகளை கொண்ட கட்டடம் ஒன்றில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்திருக்க கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 12 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆதித்யா விண்கல புவி சுற்றுப் பயணம் நிறைவு: நாளை முதல் சூரியனை நோக்கி பயணிக்கும்



ஆதித்யா எல்-1 விண்கலம் தனது புவி சுற்றுப்பாதை பயணத்தை முடித்துக் கொண்டு நாளை முதல் சூரியனை நோக்கிச்செல்லவிருக்கிறது என தகவல் வெளியாகி உள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் வடிவமைத்தது.

இந்த விண்கலம் பி.எஸ்.எல்.வி சி-57 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2 ஆவது ஏவுதளத்தில் இருந்து கடந்த 2 ஆம் திகதி விண்ணில் செலுத் தப்பட்டது.

தொடர்ந்து, பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு ஆய்வு மையத்தில் இருந்து, விண்கலத்தில் உள்ள உந்துவிசை இயந்திரங்களைச் சீராக இயக்கி, அதன் புவி நீள்வட்ட சுற்றுப்பாதை தொலைவானது படிப் படியாக அதிகரிக்கப்பட்டது.

இதன்மூலம் குறைந்தபட்சம் 256 கிலோ மீற்றர் தூரமும், அதிகபட்சம் ஒருலட்சத்து 21,973 கிலோ மீற்றர் தொலைவும் கொண்ட புவி சுற்றுப் பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப் பட்டது.

இந்த நிலையில், ஆதித்யாவின் புவி சுற்றுப்பாதை பயணம் இன்றுடன் நிறைவு பெறுகிறது. தொடர்ந்து, விண்கலத்தை நாளை புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் இருந்து விலக்கி, சூரியனை நோக்கிப் பயணிக்க வைக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட உள்ளனர். ஆதித்யா திட்டத்தில் மிகவும் சிக்கலானப் பணிகளில் இதுவும் ஒன்றாகும். இதை குறிப்பிட்ட நேரத்துக்குள் வெற்றிகரமாக முடிப்பது அவசியம்.

அதன் பின்னர் ஆதித்யா விண்கலம் சுமார் 100 நாட்கள் பயணித்து,புவியில் இருந்து 15 லட்சம் கிலோ மீற்றர் தொலை வில் உள்ள எல்-1 பகுதி அருகே, சூரிய ஒளிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

அங்கிருந்தபடியே எல்-1 பகுதியை மையமாகக் கொண்ட சுற்றுப்பாதையில் வலம் வந்தவாறு, சூரியனின் கரோனா மற்றும் போட்டோஸ்பியர், குரோ மோஸ் பியர் பகுதிகளை ஆதித்யா ஆய்வு செய்யும். இதற்காக அதில் 7 வகையான சாதனங்கள் பொருத்தப்பட் டுள்ளன. அவற்றில் 4 கருவிகள் சூரியனின் நேர் எதிர் திசையில் நிலைநிறுத்தப்பட்டு, நேரடியாக கண்காணித்து தகவல்களை வழங்கும்.

மீதமுள்ள 3 கருவிகள் சூரியனில் ஏற்படும் நிகழ்வுகளால், அதன்புற வெளியில் உருவாகும் மாற்றங்களை எல்-1 பகுதியில் உள்ள துகள்கள் மற்றும் புலங்களை ஆராய்ந்துகணிக்கும். இதன்மூலம் விண்வெளியில் கிரகங் களுக்கு இடையேயான சூரிய இயக்கவிய லின் விளைவு குறித்த அரிய விவரங்கள் கிடைக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய நாடாளுமன்றத்தின் விசேட கூட்டத்தொடர் ஆரம்பம்



இந்திய நாடாளுமன்றத்தின் விசேட கூட்டத்தொடர் இன்று நாடாளுமன்ற பழைய கட்டிடத்தில் ஆரம்பமானது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதல் நாள் நிகழ்வுகள் வழமைப்போல பழைய கட்டிடத்தில் இடம்பெறுகின்றது.

அத்துடன், நாளை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் சிறப்பு கூட்டத்தொடர் நடை பெறவுள்ளது.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரல் அறி விக்கப்படாமைக்கு காங்கிரஸ் உள் ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் வெளி யிட்டுள்ளன.

இந்தநிலையில், நாடாளுமன்ற இதழில் இது தொடர்பில், விளக்கமளிக்கப் பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், தலைமை தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் ஆணை யாளர்கள் நியமனம் தொடர்பான சட்டமூலத்தை இந்திய மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம், மக்களவையில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், சட்டத்தரணிகள் திருத்தச் சட்டமூலம், அஞ்சல் அலுவல்கள் சட்டமூலம் உள்ளிட்ட சட்டமூலங்கள் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளன.

# விவசாயிகள் போராட்டம்!

காவிரியில் தண்ணீர் வழங்க மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து, ஓசூரில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் வீதி மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு காவிரி நீர் வழங்க மறுக்கும் கர்நாடக அரசை கண்டித்து, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில், கர்நாடக மாநில எல்லையில் நேற்று முற்றுகை போராட்டம் நடை பெறும் என அறிவிக் கப்பட்டிருந்தது.

இதையடுத்து, ஓசூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகே நேற்று தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனத் தலைவர் ஈசன் முருகசாமி தலைமையில் நிர்வாகிகள் திரண்டனர். பின்னர் அங்கிருந்து பேரணியாக கர்நாடக மாநில எல்லையை நோக்கி வெற்றுக் குடங்களுடன் புறப்பட்டனர்.

இதனையடுத்து ஓசூர் உள்ளிட்ட வீதிகளின் விவசாயிகள் வீதியில் மறியலில் ஈடுபட்டனர். சுமார் 1 மணி நேரம் மறியல் நீடித்தது. பின்னர் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# சீருடை அறிமுகமும் பரிசளிப்பும்





(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை 'பைத்துல் ஹெல்ப் போ ரிலீப்' அமைப்பின் சீருடை அறிமுகமும், கடந்த கால சேவைகள் அறிமுகமும், பரிசளிப்பும் அமைப்பின் தலைவர் எம்.எச். ரைசூல் ஹக்கீம் தலைமையில் மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்று (17) நடைபெற்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக பல்வேறு சமூக நல வேலைத்திட்டங்கள், வீடமைப்பு, குடி தண்ணீர் வழங்கள் , மின்சார இணைப்புகள், ஏழைகளுக்கான உதவி திட்டங்கள், வலது குறைந்தோர் உதவி வேலைத் திட்டங்கள், கல்வி மேம்பாட்டுப் பணிகள், அனர்த்த கால உதவிகள் என பல்வேறு பணிகளை முன்னின்று செய்துவரும் இந்த அமைப்பின் உத்தியோகபூர்வ மேலங்கியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி, திடீர் மரண விசாரணை அதிகாரி அல் ஜவாஹீர், நில அளவையாளர் ஏ.ஆர். நைசர்கான் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





# பொலித்தீன் விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் ஆதம்)

பொலித்தீன் பாவனையிலிருந்து சூழலைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் மருதமுனை அடோமா அமைப்பு கல்முனை அக்பர் வித்தியாலயத்தில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளது.

தரம் 5 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதன் போது மாணவர்களுக்கு சில்வர் உணவுப் பெட்டிகளும் வழங்கப்பட்டன. மரக்கன்றும் நட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வித்தியாலய அதிபர் எம்.சி.எம்.மபாஸ் உட்பட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# முதியோர் இல்லத்துக்கு உபகரணங்கள் வழங்கல்

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் சித்தாண்டி-1 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள முதியோர் பகல் நேரப் பராமரிப்பு நிலையத்துக்கு முதியோர் தேசிய செயலகத்தால் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

பிரதேச சமூகசேவை பிரிவின் முதியோர் நலன் உத்தியோகத்தர் எல். டபிள்யு. ரி. திலினி சுபாஷினி ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதியோர் பராமரிப்பு நிலையத்துக்கான உபகரணங்களை பிரதேச செயலாளர் கோ.தனமாலசுந்தரம் வழங்கி வைத்தார் .

இதன்போது முதியோர் தேசிய செயலகம் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள், சமையல் மற்றும் பொழுது போக்கு உபகரணங்கள் என்பன இந்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

2022ஆம் ஆண்டில் முதியோர் தேசிய செயலகத்தால் 35 லட்சம் ரூபா செலவில் இந்த முதியோர் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த நடத்தப்பட்ட சூழ்ச்சியே ஈஸ்டர் தாக்குதல்

## ஹரீஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் வெளியான சனல் 04 காணொளி விடயம் பொய்யாக புனையப்பட்ட விடயமல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளன என்றே தெரிகிறது.

சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகிறது.

இலங்கை முஸ்லிங்களை குறிவைத்து அதிகார கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட பெரிய சக்திகளின் பந்தாடலுக்குள் இலங்கை முஸ்லிம்சமூகம்சிக்கிக்கொண்டுள்ளது.

பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் கொலையுடனையே முஸ்லிம் சமூகத்தின் மீதான பந்தாடல்கள் ஆரம்பித்துள்ளன என்று நம்புகிறேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்று (17) நடைபெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போரிலீப் அமைப்பின் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு



உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டுசெல்கின்றன.

அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன–அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது.

இலங்கையில் யார் ஜனாதிபதி, பிரதமர் அரசு அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தைய சக்திகளாகவே இருக்கிறது. அவர்கள் தமது சுயநலனுக்காக சுயாதீனமாக எமது நாட்டை கொண்டுசெல்ல விடமாட்டார்கள். அவர்கள் சரியாக திட்டமிட்டு நாட்டை சீரழிக்க காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக சனல் 4 இல் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை இலேசில் தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கின்றன.

அந்நிய சக்திகளின் பொறியில் மாட்டிக் கொண்ட இலங்கை போலவே வடக்கு கிழக்கில் அதிக முஸ்லிங்களை கொண்ட கேந்திர நிலையமான கல்முனையும் மாட்டிக்கொண்டுள்ளது. இவைகளை எல்லாம் பற்றிச் சிந்திக்காது கல்முனை நகரில் உள்ள சில மனநோயாளிகள் சம்பந்தமே இல்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் பேராசியர்கள் தனது இனத்தின் வேட்கைக்காக மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்து களப்பணி செய்வது போல முஸ்லிம் சமூகத்தில் முஸ்லிங்களை அரசியல் மயப்படுத்த பேராசியர் எம்.எம். பாஸீல் களத்தில் இருப்பதை காண்கிறேன்.

தனது மேற்கொண்ட ஆய்வுகளை கொண்டு சமூகத்தை பற்றி சிந்திக்கும் இலங்கை முஸ்லிங்களின் கல்வி ஆளுமை அவர். –என்றார்.



# மலையக தொழிலாளர் முன்னணி முதற்கட்டமாக மறுசீரமைப்பு

(மஸ்கெலியா நிருபர்)

மலையக மக்கள் முன்னணி மற்றும் அதன் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியில் மறுசீரமைப்பு முதற்கட்டமாக இடம்பெற்றது.

புதிய நிர்வாக மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இன்று ஹட்டனில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கட்சியின் கவுன்சில் உறுப்பினர்களாக ஆர். ராஜாராம், கணமணி சிவனேசன், ஆனந்தன், தாளமுத்து சுதாகரன், க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவராகக் கலாநிதி வே.ராதாகிருஸ்ணனும் செயலாளராகப் பேராசிரியர் எஸ். விஜயசந்திரனும், பிரதித் தலைவராக முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராமும்,தேசிய அமைப்பாளர் ந.பாலமுரளியும், நிதிச் செயலாளராக பி. கிருஸ்ணனும் நியமிக்கப்பட்டனர்.

இளைஞரணி தலைவராக லெட்சுமனார் சஞ்சய், செயலாளராக கதிர்காமத்தம்பி சுரேன், இணைப்பாளராக கலைக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகளிரணித் தலைவியாக சுவர்ணலதா இலங்கேஸ்வரன், செயலாளராக கிருஸ்ணவேணி, பிரதித் தலைவியாக கலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியிலும் பதவி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் தலைவராக கலாநிதி வே.ராதாகிருஸ்ணன், பதில் செயலாளராக புஸ்பா விஸ்வநாதன், நிதிச் செயலாளராகத் தாளமுத்து சுதாகரன், அமைப்புச் செயலாளராக எஸ். ஜெயக்குமார், பிரதி பொதுச் செயலாளராக க.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளனர்.